Royal College of Anaesthetists

# மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகள் மற்றும் பக்க விளைவுகள்

# உடல் நலமின்றி உணர்தல்

இந்தச் சிற்றேட்டைப் பற்றி இந்தச் சிற்றேடு **ஓர் அறுவைச் சிகிச்சைக்குப் பின் உடல் நலமின்றி உணர்தல் (குமட்டல்)** அல்லது **உடல் நலமின்றி இருத்தல் (வாந்தியெடுத்தல்)** பற்றியது. இது ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கலைப் பெற்ற பின்னர் நீங்கள் அனுபவிக்கக்கூடிய ஒரு பக்க விளைவாகும். இந்த நோய்க்கான காரணங்களையும் இதைப்பற்றி என்ன செய்யலாம் என்பதையும் இது விளக்குகிறது.

பொது உணர்ச்சி நீக்கி வழங்கல்கள் என்பவை ஆழமான தூக்கத்தைப் போன்ற நிலையை தரக்கூடிய மருந்துகளாகும். சில அறுவைச் சிகிச்சைகளுக்கும் செயல்முறைகளுக்கும் இவை தேவைப்படுகின்றன. பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின் போது நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள், எதையும் உணரமாட்டீர்கள்.

வெவ்வேறு வகை மயக்க மருந்து வழங்குதல்களைப் பற்றி, நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் படிக்கலாம். அது இங்கு வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## அது எப்படிப்பட்ட உணர்வாக இருக்கும்?

- நீங்கள் வாந்தி எடுக்கப் போவது போல் (குமட்டல்) உணரலாம்.
- நீங்கள் வாந்தி எடுக்கலாம்.
- நீங்கள் வாந்தி எடுக்க முயலலாம், ஆனால், வாந்தி வராமலிருக்கலாம்.

- பொதுவாக வாந்தி எடுக்கும் உணர்வு ஒரு மணி நேரத்திலிருந்து இரண்டு மணி நேரம் வரை தொடர்கிறது. சிகிச்சைக்குப் பின் அது நின்று விடுகிறது. இன்னும் அரிதாக, இது இன்னும் நீடித்து ஒரு நாளுக்கு மேல் தொடரலாம்.

## அது நிகழப்போவது எவ்வளவு சாத்தியம்

### ஒவ்வொரு 100 பேரில்



**17 நபர்களுக்கு ஏற்பட்டது** **83 நபர்களுக்கு ஏற்படவில்லை**

இந்த எண்கள் ஆராய்ச்சிகளிலிருந்து வருகின்றன. நாங்கள் இந்த எண்களை எங்கிருந்து பெற்றோம் என்பதை நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

## ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கலுக்குப் பின் குமட்டல் வரக் காரணம் என்ன?

- மயக்க மருந்துகளில் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் சில வலி நிவாரண மருந்துகள் உங்களுக்கு குமட்டலை உண்டாக்கலாம். சில ஓரிட மயக்க மருந்துகள் கூட (எடுத்துக்காட்டாக, முதுகெலும்பு சர்ந்தவை மற்றும் தண்டுவடம் வகையிலானவை) வாந்தியை உண்டாக்கலாம்.
- மயக்க மருந்துகள் உங்கள் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம். குறைந்த இரத்த அழுத்தத்தால் உங்களுக்குக் குமட்டல் வரலாம்.
- அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக உண்ணாமலிருத்தல் (சாப்பிடாமல் அல்லது குடிக்காமல் இருத்தல்) காரணமாக, பின்னர் உங்களுக்குக் குமட்டல் வரலாம். ஆனால், மயக்க மருந்து வழங்குதலின் போது உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். அறுவைச் சிகிச்சைக்கு முன்பாகச் சாப்பிடுவது அல்லது குடிப்பதை நிறுத்துவது பற்றி உங்களுக்கு ஏதாவது அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தால் நீங்கள் அவற்றைக் கவனமாகப் பின்பற்றவேண்டும்.
- பயணத்தால் உங்களுக்குக் குமட்டல் வரும் என்றால் அல்லது இதற்குமுன் மயக்க மருந்தினால் உங்களுக்குக் குமட்டல் வந்திருந்தால் இப்போதும் உங்களுக்குக் குமட்டல் வர வாய்ப்பு உள்ளது.
- சில அறுவைச் சிகிச்சைகளைச் செய்து கொள்கிறவர்களுக்குக் குமட்டல் வரும் வாய்ப்பு கூடுதலாகும்:
  - உங்கள் அடிவயிற்றில் (வயிற்றில்) அல்லது பிறப்புறுப்புப் பகுதியில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சைகள்
  - மகளிர் மருத்துவ (பெண் இனப்பெருக்க அமைப்பு) அறுவைச் சிகிச்சைகள்
  - உங்கள் ‘காது, மூக்கு மற்றும் தொண்டை’யில் நடைபெறும் அறுவைச் சிகிச்சைகள், எடுத்துக்காட்டாக, தொண்டைச்சதை

- மாறுகண் குறைபாட்டைத் திருத்தும் அறுவைச் சிகிச்சைகள்
- இரண்டு அல்லது மூன்று மணிநேரத்துக்கு மேல் தொடரும் அறுவைச் சிகிச்சைகள்.

- பதற்றத்தால், குமட்டல் வரும் வாய்ப்பு கூடலாம். உங்களுக்குக் கவலையாக அல்லது பதற்றமாக இருந்தால், உங்கள் மயக்க மருந்து வல்லுனரிடம் சொல்லுங்கள். உங்கள் கவலைகளைப் பற்றி அவர்கள் உங்களிடம் பேசுவார்கள். சில நேரங்களில் பதற்றத்தைக் கையாள உதவும் மருந்துகளையும் அவர்கள் வழங்கலாம்.

## எனக்குக் குமட்டல் வந்தால் என்ன செய்வது?

உங்களுக்குக் குமட்டல் வந்தால் உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவினர் உங்களை இன்னும் நன்றாக உணரவைக்கலாம். அவர்கள்:

- உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பைக் கண்காணித்து உங்கள் இரத்த அழுத்தம் மிகக் குறைவாக இல்லை என்பதை உறுதிசெய்வார்கள்
- உங்களுக்கு ஒரு நரம்பு வழியாக அல்லது விழுங்குகின்ற ஒரு மாத்திரை வழியாகத் திரவங்கள் மற்றும் குமட்டலைத் தடுக்கும் மருந்துகளைக் கொடுப்பார்கள்.

## குமட்டலை எப்படித் தடுக்கலாம்?

### மயக்க மருந்தின் வகை

**உங்கள் மயக்க மருந்து வல்லுனர் வெவ்வேறு வகை மயக்க மருந்துகளைப் பயன்படுத்தலாம்.** இவற்றில் சில உங்களுக்குக் குமட்டலை உண்டாக்கும் வாய்ப்பு குறைவு. உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களுக்குச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சைக்கும் மிகப் பொருத்தமான மயக்க மருந்து வகை எது என்று விளக்குவார்.

### ஒரு அறுவை சிகிச்சைக்குப் பிறகு விரைவில் சாப்பிடுவது மற்றும் குடிப்பது

உங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முன்பாகச் சாப்பிடுவதையும் குடிப்பதையும் நிறுத்தி விடும்படி உங்களுக்கு அறிவுறுத்தப்படும். இருப்பினும், நெடுநேரம் உணவு மற்றும் திரவங்கள் இல்லாமல் இருப்பதால் அறுவைச் சிகிச்சைக்குப் பின் உங்களுக்குக் குமட்டல் வரலாம். அறுவைச் சிகிச்சைக்குப் பின், உங்களால் இயன்ற அளவு விரைவாகச் சாப்பிடவும் குடிக்கவும் முயலுங்கள்.

நீங்கள் எப்போது மீண்டும் சாப்பிட மற்றும் குடிக்கத் தொடங்கலாம் என்பதுபற்றி உங்களைக் கவனித்துக்கொள்ளும் குழுவினர் உங்களுக்கு அறிவுறுத்துவார்கள். அறுவைச் சிகிச்சைக்குப் பின், அவர்கள் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாக உங்களுக்குக் கொடுக்கலாம் மற்ற திரவங்கள் லேசான உணவுகளுக்கு உங்களை ஆயத்தப்படுத்தலாம்.

## நானாகவே என்ன செய்யலாம்?

### தள்ளிப் போடாமல் முன்கூட்டியே செயல்படுங்கள்

உங்களுக்குக் குமட்டல் வரும்போது உடனடியாக உங்கள் செவிலியர் அல்லது மயக்க மருந்து வல்லுனரிடம் இதைப்பற்றிக் கேளுங்கள். குமட்டல் உணர்வு மிக மோசமாவதற்கு முன் அதைச் சரி செய்வது நல்லது. ஏனெனில், உங்களுக்கு நிறையக் குமட்டலோ வாந்தியோ வந்தால் நீங்கள் குணமாவது பாதிக்கப்படலாம்.

**இதற்கு முன் உங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்பட்டிருந்து அதன்பிறகு உங்களுக்குக் குமட்டல் வந்திருந்தால் அதைப்பற்றி உங்கள் மயக்க மருந்து வல்லுனரிடம் பேசுங்கள்.** அது மீண்டும் நிகழ்கிற ஆபத்தைக் குறைப்பதற்கு அவர்கள் சில விஷயங்களைச் செய்யலாம்.

**உங்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மிக விரைவாக எழுந்து உட்காரவோ அல்லது படுக்கையிலிருந்து வெளியேறவோ வேண்டாம்.** நீங்கள் மிக விரைவாக எழுந்து உட்கார்ந்தால் அல்லது எழுந்தால் உங்கள் இரத்த அழுத்தம் மாறலாம். இது உங்களுக்குக் குமட்டலை உண்டாக்கலாம்.

**உங்களுக்கு வலி உள்ளது என்றால், உங்கள் மயக்க மருந்து வல்லுனர் அல்லது செவிலியரிடம் பேசுங்கள்.** தீவிர வலியால் உங்களுக்குக் குமட்டல் வரலாம். அவர்கள் உங்களுக்குக் கூடுதலான அல்லது வேறொரு வலியைக் குறைக்கும் மருத்துவத்தை வழங்கலாம்.

**உங்களுக்குக் குமட்டல் வந்தால் மெதுவாகவும் ஆழமாகவும் மூச்சு விடுங்கள்.**

**நீங்கள் மாற்றுச் சிகிச்சைகளையும் கருத்தில் கொள்ளலாம்.** அக்குபஞ்சர், அக்குபிரெஷர் அல்லது அரோமாதெரபி போன்றவை குமட்டலைத் தடுக்க உதவலாம். இந்த நுட்பங்கள் செயல்படுகின்றனவா அல்லது அவை எவ்வளவு சிறப்பாக செயல்படுகின்றன என்பதைச் சொல்ல போதுமான ஆராய்ச்சி இல்லை. நீங்கள் இவற்றை முயல விரும்பினால், பயிற்சி பெற்ற தொழில் வல்லுனர் ஒருவரை நீங்களே ஏற்பாடு செய்யவேண்டியிருக்கும்.

## இவற்றைத் தெரிந்துகொள்வது நல்லது

### பயணத்தின்போது குமட்டல் வருதல்

உங்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பின் அதே நாளில் நீங்கள் வீடு திரும்புகிறீர்கள் என்றால், பயணத்தின்போது உங்களுக்குக் குமட்டல் வரலாம். ஏனெனில், நீங்கள் அசைவுக்குக் கூடுதல் நுண்ணுணர்வைக் கொண்டிருப்பீர்கள்.

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின் மூலம் உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழுப் பொறுப்பு துறப்புக்கு, இதைப் பாருங்கள்: [www.rcoa.ac.uk/patient-information-translations-tamil].

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders மொழிபெயர்ப்பாளர் சமூகத்தால் வழங்கப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்புகளின் தரம், மொழிபெயர்ப்புகளை முடிந்தவரை துல்லியமாக மாற்றுவதற்காக சரிபார்க்கப்படுகிறது, ஆனால் தவறான மற்றும் சில தகவல்களை தவறாகப் புரிந்துகொள்வதற்கான ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் இல்லம், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG

## www.rcoa.ac.uk

ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.